சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 14.11.2024

PW1:பாண்டியம்மாள் க/பெ– காட்டுராஜ்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து எனக்குரிய 1/6 பங்கை கேட்டுள்ளேன். 2 முதல் 5 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் 3ம் லக்க சொத்து எனது தாயார் பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.05.2007 ல் எனது தாயார் மேற்படி சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். தாவா 4ம் லக்க சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா 1, 2 லக்க சொத்துக்கள் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டுபாத்தியப்பட்டது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி அவருக்கான 1/6 பாகத்தை பிரித்து தரும் படி எதிர்கோரிக்கை வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய பாகத்தை 5ம் பிரதிவாதியோ, அவருடைய பாகத்தை நானும் மறுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் கூட்டுஅனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.